## மோசடித் தவிர்ப்பு மற்றும் சர்ச்சைத் தீர்வு தொடர்பான மிகச் சிறந்த நடைமுறைகள்

### சர்ச்சைத் தீர்வு பற்றிய ஆலோசனைகள்

ஒழுங்கற்ற பதிவுகளுக்காக உங்கள் விபரக்கூற்றைச் செவ்வை பார்க்கவும்

நீங்கள் விபரக்கூற்றிலுள்ள உங்கள் கடன் அட்டைக் கொடுக்கல் வாங்கல்களைச் சரிபார்ப்பதுடன், ஏதேனும் வழமைக்குமாறான கொடுக்கல் வாங்கல்கள் பற்றி விபரக்கூற்று கிடைத்த திகதியிலிருந்து 20 நாட்களினுள் வங்கிக்கு அறிவிக்கவும் வேண்டும்.

**ஒழுங்கற்ற பதிவுகள் இருப்பின் என்ன செய்யவேண்டும்?**

நீங்கள் உடனடியாக 0114 472 200 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகத் தொடர்புகொண்டு அல்லது creditcards@hsbc.com.lk என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பி அல்லது த.பெ.இல. 73, கொழும்பு என்ற முகவரிக்குக் கடிதம் எழுதி, சர்ச்சையிலுள்ள கொடுக்கல் வாங்கல் பற்றி எமக்கு அறிவிக்கலாம்.

**வாடிக்கையாளரிடமிருந்து சர்ச்சை முறைப்பாடு கிடைத்ததும் வங்கி என்ன செய்யும்?**

சர்ச்சையின் தன்மை மற்றும் Visa/MasterCard/LankaPay பிரமாணங்கள் என்பவற்றின் அடிப்படையில், வங்கியானது குறித்துரைக்கப்பட்ட கால எல்லைக்குள் சர்ச்சையைத் தீர்ப்பதற்கான எல்லா முயற்சிகளையும் எடுக்கும்.

வங்கியானது சர்ச்சை பற்றிய முறைப்பாடு கிடைத்த திகதியிலிருந்து 03 வேலைநாட்களினுள் சர்ச்சையின் நிலைமை பற்றிய இற்றைப்படுத்தலை வாடிக்கையாளருக்கு வழங்கும். பொருத்தமான வேளைகளில் மேலும் எவையேனும் இற்றைப்படுத்தல்கள் செய்யப்படலாம். வங்கியினால் வேறு விதமாகக் குறித்துரைக்கப்படாவிடின், சர்ச்சை தீர்ப்பு நடைமுறையிலுள்ள காலத்தில் வாடிக்கையாளர் தனது கடன் அட்டையைப் பயன்படுத்த முடியும்.

சர்ச்சையானது வாடிக்கையாளருக்குச் சாதகமாகத் தீர்க்கப்படின், வங்கியானது, அக் கொடுக்கல் வாங்கல் தொடர்பான கொடுக்கல் வாங்கல் தொகையையும் சம்பந்தப்பட்ட வட்டியையும் மீளளிக்கும்.

PUBLIC

**விற்பனைச் சீட்டுகளில் கையொப்பமிடுதல்**

விற்பனைச் சீட்டில் கையொப்பமிடுவதற்கு முன், அதில் விற்பனை குறிப்பிடப்பட்ட கொடுக்கல் வாங்கவின் **பெறுமதி** மற்றும் **நாணயம்** என்பவற்றை எப்போதும் சரிபார்க்கவும். வெற்று விற்பனைச் சீட்டுகளில் ஒருபோதும் கையொப்பமிட வேண்டாம்; ஏனெனில், உங்கள் கையொப்பம் இடப்படின், உங்கள் கடன் அட்டையின் பேரிலான ஏதேனும் கொடுக்கல் வாங்கல் தொகையைச். செலுத்துவதற்கு நீங்களே பொறுப்பாளியாவீர்கள்.

**இரத்துச்செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள்**

உங்கள் கொடுக்கல் வாங்கல் இரத்துச்செய்யப்படும் நேரத்தில் பின்வரும் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்:

- செல்லுபடியற்றதாக்கிய சீட்டு அல்லது மீளளிப்புப் பற்றுச்சீட்டு.
- திருப்பிக்கொடுக்கப்பட்ட பண்டங்களை வணிகர் ஏற்றுக்கொண்டார் என்பதை நிருபிக்கும் ஓர் ஆவணம் (பண்டங்கள் வணிகருக்குத் திருப்பிக்கொடுக்கப்பட்டிருப்பின்)

**நிலையான கட்டளைகளை இரத்துச்செய்தல்**

- இரத்துச்செய்தல் தொடர்பாக வணிகருக்கு நேரடியாக எழுத்தில் அறிவிக்கப்பட வேண்டும்.
- கடிதத்தின்/தொலைநகலின் பிரதியொன்றை நீங்கள் வைத்துக்கொள்ள வேண்டும்.
- Visa/MasterCard இன்டர்நஷனல் விதிகளின்படி இரத்துச்செய்கை 15 நாட்களுக்குப் பின்னர் அமுலுக்குவரும்.

**கையாளுகைக் கட்டணம்/மிகைக்கட்டணம்**

இலங்கையிலுள்ள பெற்றோல் நிலையங்களில் செய்யப்படும் கொள்வனவுகளுக்கு மட்டும் கையாளுகைக் கட்டணமொன்று அறவிடப்படும். இக் கட்டணம், கொடுக்கல் வாங்கல் கடன் அட்டையின் மீது பட்டியலிடப்படும் நேரத்தில் கணிக்கப்படும்.

மற்றெல்லா விடயங்களிலும், கொடுக்கல் வாங்கல் பெறுமதிக்கு மேலதிகமான இறுப்புக்கள் எவற்றையும் சேர்ப்பதற்கு வணிகர் அனுமதிக்கப்படமாட்டார். அத்தகைய மேலதிக இறுப்பனவு சேர்க்கப்படின்:

- மிகைக்கட்டணப் பெறுமதி விலைப்பட்டியலில் வேறாகக் காட்டப்பட வேண்டும்.

- இவ் விடயத்தை வணிகரின் வங்கியுடன் நாம் தொடர்வதற்குத் தேவையான ஆவணங்கள் எமக்கு வழங்கப்பட வேண்டும்.

வணிகரினால் வெளிப்படுத்தப்பட்டாலொழிய, அட்டை வைத்திருப்பவர் ஊக்குவிப்புக் கழிப்பனவுகளுக்கு உரித்துடையவராக மாட்டார்.

**தவணைப்பணக் கொடுக்கல் வாங்கல்கள்**

தவணைப்பணக் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக வணிகருடன் ஏற்படுகின்ற ஏதேனும் சர்ச்சை வணிகருடனேயே நேரடியாகத் தீர்க்கப்படுதல் வேண்டும். விற்பனையிடத்தில் ஏதேனும் விலை முரண்பாடுகள் (பண விலைக்கும் அட்டைக் கொடுக்கல் வாங்கலுக்கும் இடையிலான முரண்பாடு) இருப்பின், கொடுப்பனவு செய்யப்படுவதற்கு முன்பே வணிகருடன் தீர்க்கப்படுதல் வேண்டும்.

**ஹொட்டேல் கொடுக்கல் வாங்கல்கள்**

**உத்தரவாதமளிக்கப்பட்ட ஒதுக்கீடுகள்**

அதிதியொருவர் தனது அட்டை விபரங்களைப் பிணைப்பொறுப்பாகச் சமர்ப்பித்து அறையொன்றை ஒதுக்கீடு செய்யும்போது, அந்த ஒதுக்கீடு பூர்த்தி செய்யப்படுவதற்கு முன்னர், பின்வருவனவற்றைக் கவனித்தல் வேண்டும்.

- வரியுடன் அறைக்கான கட்டணம்
- ஊர்ஜிதம் செய்யப்பட்ட ஒதுக்கீட்டுக் குறியீடு
- ஹொட்டேலின் இரத்துச்செய்கைக் கொள்கை
- இரத்துச்செய்தல்களுக்கான இறுதித் திகதி

ஊர்ஜிதம் செய்யப்பட்ட ஒதுக்கீடொன்றை இரத்துச்செய்யும்போது, ஹொட்டேலின் இரத்துச்செய்கைக் கொள்கைக்கு அமைவாக அது செய்யப்பட வேண்டும் என்பதுடன் இரத்துச்செய்தல்களுக்கான இறுதித் திகதிக்கு முன்பாகவும் அது செய்யப்பட வேண்டும். அதிதியானவர் ,பின்வருவனவற்றையும் கவனித்தல் வேண்டும்:

- இரத்துச்செய்கைக் குறியீடு (இரத்துச்செய்கைக் குறியீடு பற்றி ஹொட்டேலானது அதிதிக்கு அறிவித்தல் வேண்டும்).

- இரத்துச்செய்கை தொடர்பாக வணிகரிடமிருந்து எழுத்திலான உறுதிப்படுத்துதலைப் பெற்றுக்கொள்ளுதல் எப்போதும் சிறந்தது.

ஊர்ஜிதம் செய்யப்பட்ட ஒதுக்கீடொன்று இரத்துச்செய்யப்படாத பட்சத்தில், அதிதியானவர் குறிப்பிடப்பட்ட திகதியில் வராதிருப்பின், ஓர் இரவுத் தங்குகைக்கான கட்டணத்தை அட்டை வைத்திருப்பவரிடமிருந்து அறவிட ஹொட்டேல் உரிமை கொண்டுள்ளது. இது, ஒரு "நோ ஷோ"("No Show") கொடுக்கல் வாங்கல் என்று அழைக்கப்படும். ஒரு "நோ ஷோ" கட்டணத்தை அறவிடுப்பதற்கு அட்டை வைத்திருப்பவரின் கையொப்பத்தையோ அல்லது அதிதியிடமிருந்தான அனுமதியையோ பெறுவதற்கு வணிகர் கேட்கப்படுவதில்லை.

அட்டை வைத்திருப்பவர் ஊர்ஜிதம் செய்யப்பட்ட ஒதுக்கீட்டைச் செய்திருக்கும் பட்சத்தில், அதிதி ஹொட்டேலை வந்தடையும்போது அவருக்கு அளிப்பதற்கு அறைகள் எவையும் இல்லாதிருப்பின், அதிதிக்குப் பின்வரும் உரிமைகளுண்டு.

- குறைந்த பட்சம் ஒத்த தரத்திலான இன்னுமொரு ஹொட்டேலில் ஓர் இரவு தங்குவதற்கான இடவசதி.
- அந்த ஹொட்டேலுக்குச் செல்வதற்கான போக்குவரத்து.
- சகல செய்திகளும் அழைப்புக்களும் அந்த ஹொட்லேுக்குத் திசைதிருப்பப்படுதல்.

- 03 நிமிடங்களுக்கான இலவச தொலைபேசி அழைப்பொன்று.

**முற்பண வைப்புக்கள்**

அறை ஒதுக்கீட்டை ஊர்ஜிதம் செய்வதற்கு, முற்பண வைப்பொன்றைச் செய்யும்படி ஹொட்டேல் கோரும். முற்பண வைப்பு ஒதுக்கீட்டைச் செய்யும்போது அதிதியானவர் பின்வருவன தொடர்பாக உறுதிப்படுத்துதல்களைப் பெறுதல் வேண்டும்.

- அறைக்கான கட்டணம்
- முற்பண வைப்புத் தொகை
- இறுதிக் கட்டணப் பட்டியலிலிருந்து முற்பண வைப்பு கழிக்கப்படுமென்ற உறுதிமொழி
- முற்பண வைப்பினால் உள்ளடக்கப்பட்ட காலப்பகுதிக்கான தங்குமிட வசதி ஒதுக்கீடு

- ஹொட்டேலின் இரத்துச்செய்கை விதிகள் (இரத்துச்செய்கை விதிகள் அனுசரிக்கப்படாவிட்டால், முற்பண வைப்பு முழுவதும் அல்லது அதிலொரு பகுதி மீளளிக்கப்படாதிருக்கலாம்)

**ஊர்ஜிதம் செய்யப்பட்ட ஒதுக்கீட்டின் விடயத்தில் போலவே,** ஓர் இரத்துச்செய்கை விடயத்திலும் அதிதியானவர் இரத்துச்செய்கைக் குறியீடொன்றைப் பெறுதல் வேண்டும். மேலும், அதிதியானவர் ஹொட்டேலிடமிருந்து கடன் உறுதிச்சீட்டொன்றைப் பெறுதல் வேண்டும்.

மிகையான ஒதுக்கீடுகளைப் பொறுத்தவரையிலும், அதிதிக்கு மேற்குறிப்பிடப்பட்ட உரிமைகள் அனுமதிக்கப்படும் என்பதுடன் கடன் உறுதிச்சீட்டொன்றை அவர் பெறுதலும் வேண்டும்.

**முன்கூட்டிய அதிகாரமளிப்பு**

ஓர் அதிதியின் தங்குகைக்கான மதிப்பிடப்பட்ட செலவுத் தொகைக்கு முன்கூட்டியே அங்கீகாரம் பெற்றுக்கொள்ள ஹொட்டேலுக்கு அதிகாரம் உள்ளது.

நீங்கள் உங்களது HSBC கடன் அட்டையைப் பயன்படுத்தாமல், வேறேதும் வழிகள் மூலம் இறுதிக் கொடுப்பனவுப் பட்டியலின் பெறுமதியைச் செலுத்தித் தீர்க்கும் பட்சத்தில், ஹொட்டேலுக்குச் சென்ற நேரத்தில் ஹொட்டேலினால் பெறப்பட்ட முன்கூட்டிய அதிகாரமளிப்பு இரத்துச்செய்யப்படுவதை உறுதிப்படுத்தவும்.

**பிந்திய மற்றும் திருத்தப்பட்ட கட்டணங்கள்**

அதிதி ஹொட்டேலில் இருந்து வெளியேறிய பின்னர், அதிதியிடமிருந்து அறவிடுவதற்குத் தேவையான எவையேனும் கட்டணங்கள் இருப்பின், ஹொட்டேல் அவற்றை அறவிட முடியும். ஆனால், ஹொட்டேலானது அந்த மேலதிகக் கட்டணங்களை விபரமான விளக்கத்துடன் எழுத்தில் அட்டை வைத்திருப்பவருக்கு முதலில் அறிவித்தல் வேண்டும்.

இம் மொழிபெயர்ப்புகள் குறிப்பீட்டு நோக்கங்களுக்காக மட்டுமேயாகும். மொழிபெயர்க்கப்பட்ட சிங்கள மற்றும் ,தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் முரண்பாடு காணப்படின், ஆங்கில மூல உரையே சரியானதாக மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**CCW/QCG/DRM/2018.06/TAM**